பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத வரு ஆவணி மீ 18 உ திங்கட்கிழமை (03-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 13 கதிர்: 184

# கந்தளாயில் பெரும் மோதல்;

# 5 ராணுவம் பலி! 42 பேர் காயம்!!

## ஆயுதங்களும் மீட்கப்பட்டன

கொழும்பு, செப்டெம்பர் 3

திருகோணமலை மாவட்டம் கந்தளாய்க்கு அப்பால், அல்லை— கந்தளாய் வீதியில் அல்லைப் பாலத்துக்குச் சமீபமாக நேற்று இடம் பெற்ற பெரும் மோதல் சம்பவம் ஒன்றில் ஐந்து படையினர் உயிரிழந்தனர்; 42 பேர் படுகாயமுற்றனர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வீரமரணமடைந்தார்.

தமிழ்ப் பிரதேசமான அல்லை - கந்தளாய் வீதிப் பகுதியில் இருந்து முன்னர் தமிழர்கள் விரட்டப்பட்டதும் —

அரச செலவில் அங்கு சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்ததும் தெரிந்தவையே.

இந்தப் பகுதியில் - சிங்களக் குடியேற்றங்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக - நிறுவப்பட்டிருந்த அல்லைப் பால இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய படையினர் மீதே விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் ஐந்து படையினர் உயிரிழந்ததையும் —

42 படையினர் காயமுற்றதையும் இராணுவ வட்டா

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவத் தளபதி சொல்கிறார்:

## யாழ். கோட்டைக்கு முன்னேற சிப்பாய்களின் பலம் போதாதாம்!

கொழும்பு, செப். 3

யாழ்ப்பாணம் கோட்டையைப் பிடிப்பதில் எதிர்பார்த்ததுபோல இராணுவம் முன்னேறமுடியாமைக்குக் காரணம், சிப்பாய்களின் பற்றாக்குறையே என்று இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பகுதியில் போரிடமட்டும் ஆறாயிரம் இராணுவத்தினர் தேவை என்றும்—

ஆனால் இதற்குப் பதிலாக தற்போது மூவாயிரம் இராணுவத்தினர் மட்டுமே உள்ளனர் என்றும் -

விரைவில் மேலும் 3ஆயிரம் சிப்பாய்கள் இப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் லெப்டினன்ட் ஜெனரல் வணசிங்கா தெரிவித்தார்.

இதேவேளை -

இலங்கை அரசும் இராணுவமும் திட்டமிட்டது போல் வடமாகாணத்தில் விடுதலைப்புலிகளை ஒடுக்குவது அவ்வளவு எளிதாக அமையாது என்றும் -

இது இராணுவத்திற்கும் அரசுக்கும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது என்றும் அரசியல் நோக்காளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

[ஒ-எ]

## ஈழ அகதிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டியது

சென்னை, செப். 3

தமிழகத்தில் ஈழ அகதிகளின் எண்ணிக்கை நேற்று ஒரு லட்சத்து 109 பேர் என சென்னையில் அறிவிக்கப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் வடக்கு—கிழக்கில் போர் ஆரம்பமானதை அடுத்து அங்கு நேற்றுவரை பதிவான அகதிகளின் எண்ணிக்கையே இதுவாகும். (ஒ-எ)

## மண்டையோடின்றி பிறந்த குழந்தை ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம், செப் 3

மண்டையோடு இல்லாது பிறந்த குழந்தை அநாதரவான நிலையில் மானிப்பாய் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது.

அரியாலையைச் சேர்ந்த பெண்மணி ஒருவருக்கு நேற்று முன்தினம் மண்டையோடு இன்றி ஒருகுழந்தை பிறந்தது.

நேற்றுக் காலை அந்தக் குழந்தையின் தாயார் வீடு சென்றுவிட்டார்.

அந்தக் குழந்தை மட்டும் பிரசவ வார்ட்டில் உள்ள பூட்டிய அறை ஒன்றில் வைக்கப்பட்டிருந்தது.

கைகளை ஆட்டியபடி அழுது விக்கியவாறு அநாதையாக அந்தக் குழந்தை ஒரு தட்டில் வைக்கப்பட்டிருந்ததை உதயன் செய்தியாளர்கள் இருவர் நேரில் பார்த்தனர். (உ-3-5)

## கண்ணியில் சிப்பாய் காயம்

கொழும்பு, செப் 3

மூதூர், கட்டைப்பறிச்சானில் இடம்பெற்ற கண்ணி வெடிச் சம்பவம் ஒன்றில் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## ஏறாவூரில் 3 தமிழர்கள் சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம், செப். 3

ஏறாவூர், 5 ஆம் குறிச்சியில் கடந்த வியாழக்கிழமை 3 தமிழர்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

கொலையுண்ட மூவரில் ஐயாத்துரை கோணேஸ்வரன் என்பவரும் ஒருவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

[illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ★ வடக்கு- கிழக்கு நெருக்கடி:

## தீர்வுக்கு சில யோசனைகள் இந்தியா தயாரித்துள்ளதாம்!

வடக்கு - கிழக்கு நெருக்கடிக்கு தீர்வுகாணச் சிலயோசனைகளை இந்திய அரசு தயாரித்துள்ளது.

நல்லெண்ண அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள அந்த யோசனைகளை இந்தியா இலங்கையிடம் அடுத்த சில தினங்களில் உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பிக்கவிருக்கிறது.

இதற்காக கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் நாகேந்திரநாத் ஜா, அடுத்த சில தினங்களில் ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்திக்க இருப்பதாக கொழும்புச்செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

## நேற்றும் இரு கப்பல்கள் பருத்தித்துறைக்கு வந்தன

பருத்தித்துறை துறைமுகத்துக்கு நேற்றும் இரு உணவுக் கப்பல்கள் வந்து சேர்ந்தன.

'சிகிரியா'' என்னும் கப்பல் 600 மெற்றிக் தொன் மாவுடனும்—

''திருகோணமலை றேடோர்ஸ்'' என்னும் கப்பல் ஆயிரத்து 500 மெற்றிக் தொன் உணவு, மருந்து, எரிபொருள் ஆகியவற்றுடனும் வந்து சேர்ந்தன.

ஏற்கனவே இங்கு வந்து சேர்ந்துள்ள ''லங்காசிறி'' என்னும் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் இன்று காலை பூர்த்தியாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-5)

### முல்லைத்தீவில் நேற்று முன்தினம்

## தரையிறங்கிய படையினரை சுற்றி வளைத்து கடும் தாக்கு

யாழ்ப்பாணம், செப். 3

முல்லைத்தீவில் கள்ளப்பாடு. முள்ளிவாய்க்கால் பகுதிகளில் தரையிறக்கப்பட்ட படையினரை அவ்விடத்தில் இருந்து நகரவிடாமல் விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்து தொடர்ந்து தாக்கி வருகின்றனர்.

வானத் தாக்குதல்களையும் பொருட்படுத்தாது, விடுதலைப் புலிகள் நடத்திய கடும் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாது படையினர் சஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினர்தரப்பில் பெரும் உயிர், உடல் சேதங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது (ஒ)

## புதுக்குடியிருப்பில் நேற்று ஹெலி தாக்கு; மூதாட்டி பலி

யாழ்ப்பாணம், செப். 3

புதுக்குடியிருப்பு, நெய்வேலிக் கிராமக் குடியிருப்பு பகுதிகள் மீது நேற்று ஹெலி ஒன்று சரமாரியான தாக்குதல்களை நடத்தியது.

இச் சம்பவத்தில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்தார். பச்சிளம் குழந்தை ஒன்று படுகாயமுற்றது. (ஒ)

## அன்னையர் முன்னணியின் ஆர்ப்பாட்ட பேரணி இன்று

### பங்குபற்ற சகலருக்கும் அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 3

தமிழ் மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்கள் நடத்துவதையும், பொருளாதாரத் தடை விதித்ததையும் கண்டித்தும் - அவற்றை உடனடியாக நிறுத்தக் கோரியும் யாழ் மாவட்ட அன்னையர் முன்னணி இன்று காலைமாபெரும்ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை யாழ்நகரில் நடத்த உள்ளது.

இந்தப் பேரணியில் பங்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### மீரா வெளியீடுகள்

வீரகேசரி பிரசுரங்களில் எழுதிய தலை சிறந்த எழுத்தாளர்களின் நாவல்கள் 100/- ரூபாவுக்குப் புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்குப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர் கோவில் முன்புறம். [14121]

### Dilka Watch Works

தமிழ்நாட்டில் நல்ல விலைக்கு விற்பனை செய்யக்கூடிய சிற்றிசன், அல்பர், கசியோ கடிகாரங்கள் விற்பனைக்கு உண்டு. சகல கடிகாரங்களும் திருத்திக்கொடுக்கப்படும். டில்கா, வாச் வேக்ஸ், குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம். [14129]


# நிவாரணப் பொருள்களும் பங்கீட்டு முறையில்

யாழ்ப்பாணம், செப். 3

தற்போது கப்பலில் வந்துள்ள உணவுப் பொருள்கள் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் பங்கீட்டு அடிப்படையில் வினியோகிக்கப்படும் போது புதிய நடைமுறைகள் கையாளப்பட உள்ளன.

1,500 ரூபாவுக்கு மேல் மாத வருமானம் பெறும் சகலரும் தமது குடும்பப் பங்கீட்டு அட்டையைச் சமர்ப்பித்து பொருள்களைப் பணம் கொடுத்து வாங்கவேண்டும்

உதவி அரசாங்க அதிபரால் வழங்கப்படும் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணப் படிவம், உணவு முத்திரை, ஜனசக்தி கார்ட் ஆகியவற்றை வைத்திருப்போர் அவற்றைச் சமர்ப்பித்துப் பங்கீட்டு அடிப்படையில் பொருள்களை நிவாரணமாகப் பெறலாம்.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் சுற்று நிருபம் ஒன்றை ப. நோ. கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பவிருக்கிறார்.

புதிய நடைமுறைக்கு இணங்க பங்கீட்டு பொருள்களின் அளவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஆளுக்கு முக்கால் கிலோ அரிசியும், 500 கிராம் மாவும், 300 கிராம் சீனியும் வழங்கப்படும். குடும்பத்தில் உள்ள அங்கத்தவர்கள் அடிப்படையில் இது வழங்கப்படும்.

(இ - 3)

## தப்பிய ஓட்டோ சங்கர் கைது

சென்னை செப் 3

சென்னை மத்திய சிறையில் இருந்து தப்பிய கைதி ஓட்டோ சங்கர் ஒரிஸ்ஸா மாநிலத்தில் றூர்கலா என்னுமிடத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

பல அரசியல்வாதிகள், நடிகைகள் சம்பந்தப்பட்ட திருவான்மியூர் கொலை வழக்குகள் சம்பந்தமாக ஓட்டோ சங்கர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஓட்டோ சங்கருடன் தப்பிச் சென்ற ஏனைய மூன்று கைதிகளும் ஏற்கனவே பெங்களூரில் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் மத்திய சிறையில் இருந்து தப்பிச் செல்ல உதவிய தேவி என்ற பெண்ணையும் பொலீஸார் ஒரிஸ்ஸாவில் வைத்து ஓட்டோ சங்கருடன் கைது செய்தனர்.

இருவரும் பலத்த பாதுகாப்புடன் சென்னைக்கு அழைத்து வரப்பட்டனர்.

(இ-எ)

## உண்ணாவிரதம்

சென்னை, செப். 3

வடக்கு - கிழக்கில் விமானக் குண்டுத் தாக்குதலுக்கு அப்பாவித் தமிழர் கொல்லப்படுவதற்கு கவலை தெரிவித்து நாகபட்டினத்தில் உள்ள இலங்கைத்தமிழ் அகதிகள் ஒரு நாள் உண்ணாவிரதம் கடந்த சனிக்கிழமை இருந்தனர்.

உண்ணாவிரதமிருந்தவர்களில் 97 பேர் பெண்கள், 75 குழந்தைகளும் அடங்குவர்.

(இ - எ)

## சென்னையில் அஞ்சலிக்கூட்டம்

சென்னை, கோடம்பாக்கத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட ஈ. பி. ஆர். எல். எப் தலைவர்களுக்கு அஞ்சலி தெரிவித்து சென்னையில் கடந்த சனிக்கிழமை கூட்டம் ஒன்று நடைபெற்றது.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி, ஐக்கிய கம்யூனிஸ்ட் தலைவரும் எம். பியுமான தா. பாண்டியன், மார்க்ஸிய கம்யூனிஸ்ட் எம். எல். ஏ. டபிள்யு. ஆர். வரதராஜன், பாரதிய ஜனதா தமிழ்நாடு தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இக் கூட்டத்தில் பேசினர்.

(இ - எ)

# சமரச முயற்சிகள் தோற்குமானால் பெரும் யுத்தம் வெடிக்கும் அபாயம்

## வளைகுடா நெருக்கடி குறித்து ஒரு கண்ணோட்டம்

**வளைகுடா நெருக்கடியில் போரா? சமாதானமா? என்பதைத் தீர்மானிக்கும் இறுதிக் கட்ட பேச்சுக்களை ஐ. நா. பொதுச் செயலாளர் பெரஸ்டி குயிலர் ஜோர்தான் தலைநகர் அம்மானில் ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரீக் அஸிஸுடன் நடத்திக் கொண்டிருக்கிறார். வளைகுடாநெருக்கடி பற்றிய கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகிறது.**

குவைத்தை ஈராக் படைகள் ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து வளைகுடா நெருக்கடி ஆரம்பமாகியது.

கடந்த மாதம் 2 ஆம் திகதி இந்த ஆக்கிரமிப்பு இடம் பெற்றது.

குவைத்தில் இருந்து ஈராக் படைகள் நிபந்தனை எதுவுமின்றி உடனடியாக வெளியேற வேண்டும் என்றும்—

அதுவரை ஈராக் மீது பூரண பொருளாதாரத் தடை விதிப்பது என்றும் ஐ, நா. பாதுகாப்புச்சபை ஒருமனதாக தீர்மானித்தது.

ஐ. நா. சரித்திரத்தில் முதல்தடவையாக பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளான அமெரிக்கா, சோவியத் யூனியன், சீனா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஒருமனதாக இத் தீர்மானத்தை நிறைவேற்றின.

### இணைப்பு

ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட குவைத் மீண்டும் பிரிக்கப்படமுடியாத ஒரு பிரதேசமாக ஈராக்குடன் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அமெரிக்கா தனது ராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தத் தொடங்கியது.

வளைகுடாவில் தனது படைப் பலத்தை வெகுவாக அதிகரித்த அமெரிக்கா, நேச நாடுகளான சவூதி அரேபியா பஹ்ரான், கட்டார் ஆகிய நாடுகளிலும் தனது படைகளைக் குவித்தது.

இதனிடையில்— ஈராக் மீதான பொருளாதாரத் தடையை பூரணமாக அமுல் நடத்த ஆகக் குறைந்தளவு இராணுவ பலத்தைப் பிரயோகிக்க அனுமதியளிக்கும் பிரேரணையை ஐ. நா. பாதுகாப்புச்சபை ஏற்றுக் கொண்டது. இப் பிரேரணையை அமெரிக்கா கொண்டுவந்தது.

வளைகுடா நெருக்கடிக்கு ஜோர்தான் மன்னர் ஹீசேன், எகிப்து ஜனாதிபதி ஹுஸ்னி முபராக் ஆகியோர் தனிப்பட்ட ரீதியில் எடுத்துவந்த சமரச முயற்சிகள் தோல்வி கண்டன.

வளைகுடாவில் யுத்தம் ஒன்று தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து, ஐ. நா. பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலர்— ''நான் தலையிட்டுச் சமரச முயற்சிகளை மேற்கொள்ள இதுதான் சரியான சந்தர்ப்பம்'' என்று கூறினார்.

அத்துடன், அவசரப்பேச்சுக்களை நடத்த வருமாறு ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரீக் அஸீஸுக்கு அழைப்பு விடுத்தார்.

### 19 ஆவது மாகாணம்

இச் சமயத்தில் குவைத்தை தனது 19 ஆவது மாகாணமாக ஈராக் பிரகடனப்படுத்தியது.

பகைமை நாடுகளின் பிரசைகளை பணயக் கைதிகளாக வைக்கப் போவதாக முன்னர் அறிவித்திருந்த ஈராக், பின்னர் பணயக்கைதிகளில் பெண்களையும் குழந்தைகளையும் நாட்டை விட்டு வெளியேற அனுமதிப்பதாக அறிவித்தது.

இந்தக் கட்டத்தில்— ஐ. நா. பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலர் ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரீக் அஸீஸுடனான பேச்சுக்களை கடந்த வெள்ளிக்கிழமை ஜோர்தான் தலைநகர் அம்மானில் ஆரம்பித்தார்.

முதற் சுற்றுப் பேச்சுக்கள் இருவருக்கும் இடையே ஐந்து மணித்தியாலங்கள் நீடித்தன. வளைகுடா நெருக்கடிக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் கடைசிச் சந்தர்ப்பமாக ஐ. நா. பொதுச் செயலாளரின் முயற்சி அமைந்து உள்ளது.

இப் பேச்சுக்கள் வெற்றி பெற்றால் வளை குடாவில் அமைதி நிலவும் என்றும்—

தோல்வி கண்டால், இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய யுத்தம் ஒன்று வளைகுடாவில் ஏற்படும் ஆபத்து தவிர்க்க முடியாததாகி விடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)


## இன்று திறப்பு விழா

## ★ ஸ்ரீதேவி சலூன் ★

சுபநேரம் 9 மணிமுதல் 12 மணி வரை

பலாலி றோட்,
திருநெல்வேலி தெற்கு.

[பரமேஸ்வரா சந்திக்கும் ஆலடிச் சந்திக்கும் இடையில்]

டி. சி. டிரான்ஸ் போமர் முன்னாலுள்ள ஆலடிச் சந்தி 6ஆம் ஒழுங்கையில் இருந்து இடம் மாற்றப்பட்டுள்ளது.

உரிமையாளர்: இ. குணரத்தினம்

[14123]


## சதாம் பேச்சுக்கு தயாராம்

வாஷிங்டன், செப் 3

உலகில் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் அமெரிக்காவுடனும் பிரிட்டனுடனும் வளைகுடா நெருக்கடியைத் தீர்ப்பது குறித்து பேச்சுக்கள் நடத்தத் தயாராக இருப்பதாக ஈராக் ஜனாதிபதி சதாம்ஹுசேன் டெலிவிஷனில் பேசுகையில் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்த அழைப்பை பிரிட்டனும் அமெரிக்காவும் நிராகரித்து விட்டன. (இ-எ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி துரையப்பா கனகம்மா

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி துரையப்பா (பிஸ்கால்) வின் அன்பு மனைவி கனகம்மா 30 - 08 - 90 வியாழக்கிழமையன்று காலமானார். அன்னார் வல்லவாம்பிகை, காலஞ்சென்ற நாகேஸ்வரி, விக்கினேஸ்வரி, இராஜேஸ்வரன் (வருமான வரி இலாகா), மகேஸ்வரி, நகுலேஸ்வரி, சிறீதரன் (எஞ்சினியர் U. K) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஏரம்பப்பிள்ளை, பொன்னம்பலம், இராமச்சந்திரன் [ஓய்வு பெற்ற பிரதம இலிகிதர், பொலிஸ் அலுவலகம் மன்னார்), சரோஜினிதேவி, காலஞ்சென்ற சிறீஸ்கந்தராஜா (முன்னாள் கொக்குவில் கிராமசபை உறுப்பினர்), வள்ளிநாயகி (U.K) ஆகியோரின் அன்பு மாமியும், தனேஸ்வரி, சாந்தினி (Canada), மயூரநாதன் (டாக்டர் U.K), செந்திநாதன், அம்பிகா, காலஞ்சென்ற ராதா, பவானி, நந்தினி, லதா, பத்மினி, சந்திரகுமாரி, (Fudo Enterprises, Jaffna), சந்திரகுமார் (Ceygma Pumps, Navatkuli), சந்திரகாந்கா (M/S Andries & Co, Navatkuli), சந்திரவதனி, சந்திரசேகர் (Switzerland), சந்திரசூரியர், சந்திரமனோகரி, ரஞ்சினி, கல்யாணி, ரவிச்சந்திரன் ஸ்ரீரஞ்சினி, ஸ்ரீரஜனி, தவச்சந்திரன், சுதாதரன் (U.K), நித்தியதரன் (U.K) ஆகியோரின் அன்புப் பேத்தியும், சியாமளன், தர்ஷனி, கஜப்பிரதா, றெபேக்கா, கிருபன், சுஜித்திரா, சஜிகரன், கிறிசாந்தி, சிந்துஜன், சுதர்ஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 31 - 8 - 90 வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்று நுணாவில் குச்சாப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் எற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
கு. இராமச்சந்திரன்.
[மருமகன்]

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(14128)

## திரு. பொ. சோமாஸ்கந்தசிவம்
(அதிபர் யார்க்கருவு விநாயகர் வித்தியாலயம்)

## திருமதி சோ. மங்களநாயகி
(ஆசிரியை யார்க்கருவு வி. வித்.)

திரு. பொ. சோமாஸ்கந்தசிவம் (அதிபர் யார்க்கருவு விநாயகர் வித்தியாலயம்), திருமதி சோ. மங்களநாயகி ஆசிரியை யார்க்கருவு வி. வித்) ஆகிய இருவரும் வெள்ளியன்று [31 - 8 - 90] அகால மரணமாகிவிட்டார்கள். இவர்கள் செல்வி சோ. ஆதி (சா / இந்துக் கல்லூரி] உயர்வகுப்பு மாணவி) யின் பெற்றோரும், காலஞ்சென்ற பொ. சிவராமலிங்கம் (S. P. H. I), பொ. சிவபாதசுந்தரம் [R.M.P] யின் சகோதரரும் மைத்துனியும் செல்வி இ. நல்லநாயகியின் (ஆசிரியை யார்க்கருவு வி. வித்) அக்காவும், அத்தானுமாவார். இறுதிக் கிரியைகள் யாவும் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
பொ. சிவபாதசுந்தரம்,
அருளகம்,
சங்கத்தானை.

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(14131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளருக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், செப். 3
யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவும் நெருக்கடியான சூழ் நிலையிலும்- ஊரடங்கு அறிவிக்கப்பட்ட போதிலும் - தமது சேவையைக் கடமை உணர்வுடன் மிகப் பொறுப்பாகச் செய்து வருகிறார்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள்.

கூட்டுறவுச் சங்கக் கிளைகள் தினமும் திறக்கப்பட்டு கிடைக்கும் உணவுப் பொருள்களை பங்கீட்டு அடிப்படையில் விநியோகித்து வரும் இவர்களின் மனிதாபிமானப் பணியை மக்கள் பலரும் பெரிதும் பராட்டுகிறார்கள்.

குண்டு வீச்சு, ஷெல் அடி, பீரங்கி வேட்டு ஆகியவற்றின் மத்தியிலும், தமது உயிர்ப் பாதுகாப்பைத் துச்சமென மதித்து உணவுத் தட்டுப் பாடான இக்காலத்தில் மக்களுக்கு உதவும் இவர்களின் பணி ஏனைய அரசாங்க தனியார் துறை ஊழியர்களுக்கு ஒரு முன்மாதிரி என்று வாசகர்கள் பலரும் உதயனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதங்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நாம் பட்டினிச் சாவை எதிர்நோக்கும் இக்காலகட்டத்தில் மக்கள் நலன் நாடிப் பணிபுரியும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களைப் பாராட்டவிடில் மக்கள் தமது கடமையில் தவறியவர்கள் ஆவார்கள்- என்று மணியம் தோட்டத்தைச் சேர்ந்த வாசகர் ஒருவர் தமது கடிதத்தில் தெரிவிக்கிறார்.

உரிய நேரத்தில் மக்களுக்கு உதவி அவர்களின் வயிறு வாடாமல் உதவப் பணிபுரியும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு மக்கள் தமது நன்றியையும் தெரிவிக்கிறார்கள்.
(அ)

முல்லைத்தீவில் இருந்து

# புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு பகுதிகளுக்கு பலர் இடம் பெயர்வு

யாழ்ப்பாணம், செப். 3
முல்லைத்தீவில் தற்போது இடம்பெறும் இராணுவ நடவடிக்கையால் நகரப்பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பு, உடையார்கட்டுப் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

கடந்த ஒரு வாரகாலமாக முல்லைத்தீவு நகரப்பகுதியிலும், முள்ளிவாய்க்கால், கள்ளப்பாடு கிராமங்களிலும் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கையால் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு, உடையார் கட்டுப்பகுதிகளில் உள்ள உறவினர்கள் வீடுகளிலும், பாடசாலைகளிலும் அவர்கள் தங்கியுள்ளனர்.

முல்லைத்தீவு ப. நோ. கூ. சங்கம் இவர்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளது. [இ-3-6]

## ரூபா 6 ஆயிரத்து 700 கோடி துண்டு விழும் தொகை

கொழும்பு, செப். 3
இலங்கையின் அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 6 ஆயிரத்து 700 கோடி ரூபா துண்டு விழும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வருமானம் 7 ஆயிரத்து 200 கோடி ரூபாவாகவும் - செலவீனம் 13 ஆயிரத்து 900 கோடி ரூபாவாகவும் இருக்கும் என்றும் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா வியாழன் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

எதிர்வரும் அக்டோபர் 12 இல் பிரதமரும் நிதி அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா நாடாளுமன்றத்தில் 1991 வரவு செலவுத்திட்டம் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிப்பார். [இ-எ]

## பரந்தன் திரும்ப மக்கள் அச்சம்

யாழ்ப்பாணம், செப். 3
பரந்தனில் இருந்து இராணுவம் வாபஸான போதும், மக்கள் மீளக்குடியேற அச்சம் கொண்டுள்ளனர்.

பரந்தன் சந்தியில் இராணுவம் நிலை கொண்டிருந்த பகுதிகளில் படையினர் மிதி வெடிகளையும், கண்ணிவெடிகளையும் புதைத்ததாலும் - மீளவும் படையினர் வரலாம் என்ற அச்சத்தாலும் மக்கள் திரும்பிச் செல்லத் தயங்குகிறார்களாம்.

புதுக்குடியிருப்பு பகுதிகளிலேயே அவர்கள் தொடர்ந்து தங்கியுள்ளனர். (இ - 3 - 6)

## செய்திச் சாரம்

## கிளிநொச்சி ஆசிரியருக்கு சம்பளம்

யாழ்ப்பாணம், செப். 3
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு ஆகஸ்ட் மாதச் சம்பளம் வழங்குவதற்காக ஒருகோடி ரூபாவை வடக்கு - கிழக்கு மாகாணசபை கல்விஅமைச்சு வழங்கியுள்ளது.

சம்பளம் வழங்குவதற்கான கட்டு நிதி வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கத்துக்கு வங்கி மூலம் அனுப்பப்பட்டுள்ளது.
(இ-3)

## சந்தன மரம்

கொழும்பு, செப். 3
நாட்டில் உள்ள இந்து ஆலயங்களைச் சுற்றி சந்தனமரக் கன்றுகளை நடுவதற்கானஏற்பாடுகளை இந்து அறநிலைய விவகார துணை அமைச்சர் பி. பி.தேவராஜ் மேற்கொண்டுள்ளார். (இ - எ)

## புங்குடுதீவில் அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், செப். 3
ஊர்காவற்றுறைப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து புங்குடுதீவில் ஆலயங்களிலும், தேவாலயங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் தங்கியுள்ள அகதிகளுக்கு புங்குடுதீவு, வேலணை ப. நோ. கூ. சங்கங்களும், சர்வோதய அமைப்பும் உதவிகளை வழங்கி வருகின்றன.(இ-3)

## 3 மாத சம்பளம் இன்னும் இல்லை

பச்சிலைப்பள்ளி, செப், 3
யாழ். மாவட்டத்திலுள்ள அரச வடிசாலைக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு ஜூன், ஜூலை. ஆகஸ்ட் மாதச் சம்பளம் வழங்கப்படவில்லை என ஊழியர்கள் கவலை தெரிவித்தனர்.
(ஒ-117)

## ஓய்வூதிய வவுச்சர்

கொழும்புத்துறை, செப். 3
யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான ஆகஸ்ட் மாத வவுச்சர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் எடுத்துவரப்பட்டு யாழ் செயலகத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளன. [இ-30]

## பனம் பொருள் உற்பத்தி

பச்சிலைப்பள்ளி, செப். 3
பளை, கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் உள்ள பனம்பொருள் உற்பத்திச் சங்கங்கள் பனம் வெல்ல உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன. [இ-117]

## பணம் வழங்க அரச அதிபர் உறுதி

யாழ்ப்பாணம்,செப். 3
கல்வித் திணைக்களத்தினால் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட உள்ள பணம் அரசாங்க அதிபருக்கு கிடைக்க உள்ள பணம் மூலம் வழங்கப்படும், யாழ். அரசாங்க அதிபர், வட மாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்க நிர்வாகத்திடம் மேற்கண்ட உறுதிமொழியை வழங்கியுள்ளார். [இ]

## தேங்காய் விலை ஏற்றம்

பச்சிலைப்பள்ளி, செப். 3
சாவகச்சேரி, கொடிகாமம் பகுதிகளில் தேங்காயின் விலை நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணமுள்ளது.

தேங்காய் ஒன்று ஏழு ரூபா முதல் எட்டு ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.
[ஒ-117]

## ப. நோ. கூ. சங்க பணியாளருக்கு பாராட்டு

வட்டுக்கோட்டை, செப். 3
இக்கட்டான இந்த காலகட்டத்தில் சங்கானை ப. நோ. கூ, சங்க ஊழியர்கள் செய்துவரும் சேவையைப் பணிப்பாளர் சபை பாராட்டி உள்ளது.

பணியாளர்களுக்கு ஊக்குவிப்புப் பணமாக 200 ரூபா வழங்குவதெனவும் சபை தீர்மானித்துள்ளது. (ஒ-161)

## காரைநகர்

யாழ்ப்பாணம், செப். 3
ஊரடங்குகாரணமாககாரைநகர் ப.நோ.கூ. சங்கத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்து உணவுப் பொருள்களை அனுப்ப முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## தட்டுப்பாடு

கொழும்புத்துறை, செப்.3
யாழ். மாவட்டத்தில் முத்திரைக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. சில முக்கிய தேவைகளுக்கு மக்கள் இரண்டு ரூபா முத்திரைகளைத்தேடி அலைகின்றனர்.
(ஒ-30)

## ஜனாதிபதி புதல்வருக்கு ரஞ்சன் சொன்ன புத்திமதி

கொழும்பு' செப். 3
ஜனாதிபதி பிரேமதாசாவின் மகன் சஜீத்தும் இப்போது மெதுமெதுவாக ஒரு பிரமுகராகி வருகிறார்.

பல பொது வைபவங்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் அவர் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டு முக்கிய இடம் கொடுக்கப்படுகிறது.

அத்தோடு நிற்கவில்லை. அந்த வைபவங்கள் நிகழ்ச்சிகள் தப்பாமல் ரூபவாஹினியில் செய்தியாகக் காட்டப்படுகின்றன.

அமைச்சர்கள், எம். பிக்கள் கலந்துகொள்ளும் பலநிகழ்ச்சிகளுக்கு திரு. சஜீத் பிரதம விருந்தினராக அழைக்கப்படுவதால் அமைச்சர்களுக்கு உரிய முக்கியத்துவம் குறைந்து விடுகிறது. பாவங்கள்! மக்கள் பிரதிநிதிகள் கைகட்டி பக்கவாத்தியங்கள் போல சஜீத்துக்கும் பக்கத்தே நிற்பதைப் பார்க்கப் பரிதாபமாக - கண்றாவியாக இருக்கிறது ரூபவாஹினியில்!

ஜோன் அமரதுங்காவாக இருந்தால் என்ன ரஞ்சன் விஜேரத்தினாவாக இருந்தால் என்ன ''லொக்காவின்'' (பெரியவரின்) மகனுக்குப் பின்னர் தான் மாலை, மரியாதை எல்லாம்.

வடக்கு - கிழக்கில் யுத்தத்தில் கால் இழந்த சிப்பாய்களைப் பார்த்து ஆறுதல் கூறும் அளவுக்குசஜீத் உயர்த்தப்பட்டுவிட்டார்! இராணுவ தளபதியும் அவருடன் கூட வல்லவா செல்கிறார்!

மக்கள் பிரதிநிதிகளுக்கு மேல் பெரியவர் மகன் உயர்ந்து முதன்மை பெறுவதை விரும்பாததாலோ என்னவோ, அமைச்சர் ரஞ்சன் தாமும், சஜீத்தும் கிரிலப்பனையில் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் வைத்து பின்வருமாறு ஆலோசனை கூறியிருக்கிறார்.

ஐ. தே. க. பொதுச் செயலாளர் என்ற வகையில் சஜீத்துக்கு நான் வழிமுறைகளைச் சொல்லுகிறேன். நடைபாதையில் இருந்து பத்திரிகை விற்கவேண்டும். சந்தாப் பணம் சேகரிக்க வேண்டும். மக்களுடன், கட்சி உறுப்பினர்களுடன் கலந்து பழக வேண்டும்.

இவற்றை கடைப்பிடித்தால் எதிர்காலத்தில் முன்னுக்கு வரலாம். நாடாளுமன்றத்துக்கும் வரலாம், மற்றும்படி பரசூட்டில் வந்தாலும் அதில் ஓட்டை விழுந்தால் அதோ கதிதான். சஜீத்தின் தந்தை எவ்வாறு முன்னேறினார் என்பதை அவர் தனக்கு வழிகாட்டியாகக் கொள்ளலாம் — என்றார்.
(அ)

## வவுனியாவில் ஷெல் வீச்சு

வவுனியாப் பகுதியில் ஊரடங்கு அமுலானதைத் தொடர்ந்து இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இடம் பெயர்ந்துள்ள மக்கள் அதிகளவில் தங்கியிருக்கும் கிராமப் புறங்களை நோக்கியே ஷெல்கள் ஏவப்படுகின்றன. [இ-6]

## ஆஸ்பத்திரிக்கு டயர்கள்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிச் சூழலை அடையாளம் காட்டுவதற்காக - தீமூட்டுவதற்குத் தேவையான - டயர்களை வர்த்தகர் ஒருவர் வழங்கியுள்ளார்.

செஞ்சிலுவைச்சங்க வாகனப் பாதுகாப்புடன் டயர்கள் லொறிமூலம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டன.

யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள ஸ்ரான்லிடயர்வேக்ஸ் உரிமையாளரே மேற்படி அன்ளிப்பை வழங்கியவர் ஆவார்.
(ஒ-5)

# திருக்கேதீஸ்வரம் பகுதி தொடர்ந்து மயான பூமி போல் காட்சி தருகிறது

மன்னார், செப். 3
திருக்கேதீஸ்வரம் இன்னும் மயான பூமிபோல் காட்சி அளிக்கிறது.

கடந்த மாத நடுப்பகுதியில் படையினர் இப் பகுதிக்கு வந்து திரும்பிய பின் இங்கு நித்திய பூசைகள் தடைப்பட்டுள்ளன. பூசகர்களும் வெளியேறிவிட்டனர்.

திருக்கேதீஸ்வரத்துக்கு படையினர் வந்தபோது அன்னதானத்துக்காக அங்கு வைக்கப்பட்டிருந்த நெல் மூடைகளையும்எடுத்துச்சென்றனர். கோயிலில் இருந்த ஜெனரேட்டர், கிடாரம், மற்றும் பொருள்களும் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டன.

படையினர் திருக்கேதீஸ்வரம் வந்த போது அப்பகுதியில் 10க்கு மேற்பட்ட வீடுகளை புல்டோசர் மூலம் தரை மட்டமாக்கி இருந்தனர்.

மடுவில் தங்கி உள்ள அகதிகள் பெரிய பண்டிவிரிச்சான், ஆள்காட்டி வெளி, அடம்பன், திருக்கேதீஸ்வரம் வழியாகவே பள்ளி முனை, தலைமன்னார் சென்று இந்தியா செல்கின்றனர்.

முன்னர் இந்தியா செல்லும் அகதிகள் எருக்கலம்பிட்டி, பேசாலை, வங்காலை ஆகிய பகுதிகள் மூலமும் இந்தியா சென்றனர்.

தற்போது அகதிகள் தலைமன்னார் மார்க்கமாக மட்டுமே இந்தியா செல்கின்றனர். [இ-164]

## ரூ. 80 லட்சம் நட்டம்

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கான ரயில் சேவைகள் இடை நிறுத்தப்பட்டிருப்பதால், ரயில்வே திணைக்களத்திற்கு மாதந்தோறும் 80 லட்சம் ரூபா வரையில் நட்டம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## காயமுற்றோர் புங்குடுதீவிலும்

யாழ்ப்பாணம், செப். 3
ஊர்காவற்றுறை முதல் மண்டைதீவு வரை இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையினால் காயமுற்ற சிலர் புங்குடுதீவு ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
[ஒ-5-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலில் வந்த பொருள்களை லொறிகளில் எடுத்துவர முடியவில்லை

யாழ்ப்பாணம், செப் 3

பருத்தித்துறையில் கப்பலில் இருந்து இறக்கப்பட்ட உணவுப் பொருள்களை குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கு எடுத்துச்செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது,

உணவுப்பொருள்களுக்கு பாதுகாப்பு வழங்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பின்நிற்பதாக அறியவருகிறது.

பருத்தித்துறையில் இறக்கப்பட்ட பொருள்கள் இப்போது புலோலி, பருத்தித்துறை, கட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் களஞ்சியங்களில் வைக்கப்பட்டுள்ளன.

அவற்றை குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கு பல நோ. கூ. சங்க லொறிகளில் எடுத்துச் செல்ல அவற்றுக்கு பாதுகாப்பு வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு நேற்று மாலைவரை சாத்தியமான பதிலை வழங்கவில்லை எனத் தெரியவந்தது. (அ-3-5)

## தாதியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம். செப். 3

தாதிகள் பயிற்சிநெறிக்காக முல்லேரியா சென்று திரும்பியவர்கள் மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் வந்து கடமையாற்றுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். [ஒ-5]

# முஸ்லிம் ஊர்காவலரினால் பெண்கள் படுகொலை!

யாழ்ப்பாணம், செப். 3

கிழக்கில முஸ்லிம் ஊர்காவல் படையினர் தமிழ்ப் பெண்களைப் படுகொலை செய்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக அகதி முகாமிலிருந்து வெளியேறி வேறு முகாம் ஒன்றுக்குச் சென்ற தமிழ் அகதிப் பெண்கள்மீது முஸ்லிம் ஊர்காவல் படையினர் நடத்திய தாக்குதலில் ஒரு பெண் பலியானார். மற்றொரு பெண் காயமுற்றார்.

கடந்த வெள்ளியன்று நடந்த இந்தச் சம்பவத்தில் மார்க்கண்டு அருளம்மா (வயது 35) என்ற மூன்று பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவர்.

மட்டக்களப்பு மாவட்டம ஐயங்கேணியில் நடந்த மற்றொரு சம்பவத்தில் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் 2 பெண்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆறு பிள்ளைகளின் தாயாரான செல்லத்துரை தங்கத்துரை[வயது45] செல்லத்துரை அருளம்மா [வயது 60] ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டனர். [உ]

## முதலுதவிப் பயிற்சி

யாழ்ப்பாணம், செப். 3

யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் இயங்கும் அவசர முதலுதவிச் சேவை நிலையத்தினர் முதலுதவிப் பயிற்சி வகுப்பு ஒன்றை இன்று முதல் ஆரம்பிக்கவுள்ளனர். (அ-5)

# யார்க்கரு தாக்குதலில் பிள்ளையார் ஆலயம் சேதம்

சரவெட்டி, யார்க்கரு பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை பொம்மர்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் அங்குள்ள பிள்ளையார் கோவில் பலத்த சேதமடைந்தது.

ஆலய முன்மடம், தண்ணீர்ப்பந்தல் என்பன முற்றாகச் சேதமுற்றன. கோவில் வெளிமண்டபம், வசந்தமண்டபம், கேணிப்பகுதிகளும் சேதமுற்றன.

அன்றைய பொம்மர் தாக்குதலின் போது யார்க்கரு வித்தியாசாலை அதிபர் திரு. பொன்னம்பலம் சோமாஸ்கந்தசிவம்(வயது 58), அவரது மனைவி மங்களநாயகி (வயது 57) ஆகியோர் உயிரிழந்தனர். இவர்களின் மகளான கோ. ஆதி காயமுற்றார். (ஒ-5-6)

# முல்லைத்தீவுக்கு மா இல்லை; கப்பல் இங்கு வந்து சேர்ந்தது

பருத்தித்துறை, செப் 3

திருகோணமலையில் இருந்து மா ஏற்றிவந்த கப்பல் முல்லைத்தீவில் மாவை இறக்காமல்பருத்தித்துறைக்கு நேற்று வந்து சேர்ந்தது.

முல்லைத்தீவுக்கு 100 மெற்றிக் தொன் மாவையும், யாழ்ப்பாணத்துக்கு 500 மெற்றிக் தொன் மாவையும் ஏற்றி வந்த ''சிகிரியா'' என்ற கப்பலே நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

முல்லைத்தீவில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அங்கு மா இறக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-5)

# புலிகளுடன் பேச அரசு தயாராம்!

## ஹமீத் வெளியிட்ட தகவல்

கொழும்பு, செப் 3

வடக்கு-கிழக்கில் மோதல்கள் இடம்பெறுகின்றபோதிலும், எந்தக் கட்டத்திலும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்களை நடத்த இலங்கை அரசு தயாராக இருப்பதாக நீதி அமைச்சரும் வடக்கு-கிழக்கு மாகாண சமாதானக் குழுத்தலைவருமான ஜனாப் சாகுல் ஹமீது நியுயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இச்செய்தியை கொழும்பில் இருந்து வெளிவரும் அரசு சார்புப்பத்திரிகைகளான தினகரனும் சண்டே ஒப்சேவரும் கட்டம் கட்டி முன்பக்கச் செய்தியாக வெளியிட்டிருக்கின்றன. (உ-எ)

## 2,500 குடும்பங்கள் தஞ்சம்

மண்டைதீவு, அல்லைப்பிட்டி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் 2,500 குடும்பங்கள் மண்கும்பானில் தஞ்சம் அடைந்துள்ளன.

மண்கும்பான் சிவகாமி அம்மன் கோவிலிலும், மண்கும்பான் மகாவித்தியாலயத்திலும் தஞ்சமடைந்துள்ள அந்தக் குடும்பங்கள் உணவு, உடைகள் இன்றி அவலப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது,

# வடக்கு - கிழக்கு இணைப்பு குறித்து சர்வகட்சிக் கூட்டம் ஆராயுமாம்

## அமைச்சர் தொண்டமான் தகவல்

சென்னை. செப். 3

வடக்கு-கிழக்கு இணைப்பு அப்படியே நீடிக்கப்படவேண்டுமா? அல்லது இணைப்பை நீடிக்க சர்வசன வாக்கெடுப்பு கிழக்கில் நடத்தப்பட வேண்டுமா?

இதுபற்றி ஆலோசனை நடத்த எதிர்வரும் புதன், வியாழன் ஆகிய தினங்களில் கொழும்பில் அனைத்துக் கட்சிகளின் கூட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இத்தகவலை அமைச்சர் தொண்டமான் சனிக்கிழமை செய்தியாளரிடம் வெளியிட்டார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தரமாக இணைப்பது பற்றி சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டியதில்லை என்பதே தனது கருத்து என்றும் அமைச்சர் சொன்னார்.

தமிழர் நலனில் அக்கறையுள்ளவர்கள் தற்போது அரசு படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேநடந்து வரும் மோதலை நிறுத்த முன் முயற்சிகள் எடுக்கவேண்டும் என்றும் திரு. தொண்டமான் கூறினார்.

இந்திய- இலங்கை ஒப்பந்தம் மதிக்கப்படவேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் என்ற வகையில்தான் கருதுவதாகவும் திரு. தொண்டமான் சொன்னார்.

வடக்கு-கிழக்கு மாகாணம் உருவாவதற்கும் தீவின்இரண்டாவது ஆட்சி மொழியாக தமிழ் வருவதற்கும் அந்த ஒப்பந்தம் உதவியதாகவும் திரு. தொண்டமன் குறிப்பிட்டார்.

சண்டையில் அப்பாவித் தமிழர் கொல்லப்படுவதற்கு கவலை தெரிவித்த திரு. தொண்டமான் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண இருதரப்பினரும் முன்வரவேண்டும் என்றும் சொன்னார்.

இலங்கையில் அமைதி நிலவுவதற்கு தமிழ்நாடு அரசு நேரடியாக உதவமுடியாது என்றும் இந்திய மத்திய அரசுதான் உருப்படியாக உதவமுடியும் என்றும் முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்ததாக திரு. தொண்டமான் தகவல் வெளியிட்டார். (இ-எ)

# புல்மோட்டை சிப்பாய்கள் பொறிவெடியில் சிக்கினர்

யாழ்ப்பாணம், செப். 3

புல்மோட்டை முகாமில் இருந்து வெளியேறிய சிப்பாய்கள் விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்ட பொறிவெடிகளில் சிக்கினர்.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இந்தச் சம்பவத்தில் 4 படையினர் தமது கால்களை இழந்தனர். (ஒ)

# வளைகுடா நெருக்கடி; குயிலரின் முயற்சி தோல்வி

ஐ. நா, செப். 3

வளைகுடா நெருக்கடிக்கு தீர்வு காண ஈராக் அமைச்சருடன் தான் நடத்திய பேச்சுக்கள் ஏமாற்றமளிப்பதாக அமைந்துவிட்டது என்று ஐ. நா. பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து சொல்வதற்கு ஒன்றுமேயில்லை என்றும் திரு. குயிலர் கூறினார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பின்லாந்து தலைநகர் ஹெல்சிங்கில் அமெரிக்க அதிபர் புஷ் - சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் ஆகியோருக்கு இடையே நடைபெறும் ஒரு நாள் உச்சிமாநாடு வளைகுடா நெருக்கடிக்கு வழி கண்டால் தான் உண்டு என்றும் ஐ நா. பொதுச்செயலாளர் சொன்னார்.

## ஏறாவூரில்...

[1ஆம் பக்கத்தொடர்ச்சி]

கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்ட ஆறுமுகம் இராஜரத்தினம் (வயது 26) என்பவர் பின்னர் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் தெரிய வருகிறது (ஒ)

## அன்னையர்---

பற்றுமாறு சகலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஊர்வலம் இன்று காலை 9 மணியளவில் நல்லூர் முத்திரைச்சந்தியிலிருந்து ஆரம்பமாகி கச்சேரி - நல்லூர் வீதியூடாக யாழ். செயலகத்தை சென்றடையும். அங்கு அரச அதிபரிடம் பொது அமைப்புகளினதும், சங்கங்களினதும், சன சமூக நிலையங்களினதும் கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள் கையளிக்கப்படும். [உ]

## கந்தளாயில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரங்கள் ஒப்புக்கொண்டன என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

இந்த மோதலின் போது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி பேர்னாட் வீர மரணமடைந்தார்.

பின்வரும் ஆயுதங்கள் தங்களால் மீட்கப்பட்டன என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன

- ★ ரி - 56 ரக ரைபிள்கள் 4
- ★ 116 ரவைகள்
- ★ 16 ரவைக்கூடுகள்
- ★ [illegible] குண்டுகள் – 4
- ★ [illegible] - 2
- ★ தண்ணீர்ப் போத்தல் -2. [உ-எ]


## மலிவு விற்பனை

சுத்தமாக்கப்பட்ட, தரம் வாய்ந்த இறைச்சிக் கோழி (Dressed Chicken) மிக மலிவான விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

காலை முதல் மாலை வரை எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.

குறைந்த அளவிலேயே கையிருப்பு உண்டு.

வாருங்கள்! வாங்குங்கள்!!

392. நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[உதயன் பணிமனைக்கு அருகில்]

[C-5178]


## மரண அறிவித்தல்

### அப்பையா கமலலட்சுமி

கமலலட்சுமி காலமானார். இவர் நந்தாவிலைச் சேர்ந்த காலம்சென்ற மலாயன் பென்சனியர் அப்பையா தம்பதிகளின் மகளும், அன்னலட்சுமி, செல்வலட்சுமி, தெய்வேந்திரராசா (மட்டக்களப்பு) ஆகியோரின் சகோதரியும். சரோஜினிதேவி, ரூப ரஞ்ஜினிதேவி (U.K) ஆகியோரின் சிறியதாயாரும், காலம்சென்ற சட்டத்தரணி M. ஆறுமுகம், ஜெகதா அவர்களின் மைத்துனியும், ஆறுமுகராசா, செந்தூரன், கரிசாந்தி, திலீபன் ஆகியோரின் மாமியாரும், கீதாவின் (கீதபாலினியின்) பேத்தியும்ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 1 9-90 சனிக்கிழமை நடைபெற்றது. இவ்வறிவித்தலை யாவரும் ஏற்றுக்கொள்ளவும்:

தகவல்;
ஆறுமுகராசா.
(மருமகன்)

நந்தாவில்,
கொக்குவில்.

[13935]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org